


**20.08.2024**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் வானிலை முன்னறிவிப்பு முறையை நவீனப்படுத்தி துல்லிய தகவல்களை வழங்குவதன் மூலம் பேரிடர் கால உயிரிழப்பும், சேதமும் குறையும் என்று குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. இந்திய, மலேசிய மின்னனு பண பரிவர்த்தனை திட்டங்கள் விரைவில் இணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

3. மகளிருக்கு எதிரான பாலியல் வன்கொடுமை குற்றவாளிகளுக்கு பாரபட்சமின்றி தண்டனை வழங்கப்பட வேண்டுமென்று மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாட்டில் கால்நடை பராமரிப்பு, மீன்வளம் உள்ளிட்ட துறைகளின் புதிய கட்டிடங்களை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

5. தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணிகள் இன்று தொடங்கியுள்ளன.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

நாட்டின் வானிலை முன்னறிவிப்பு முறையை நவீனப்படுத்தி துல்லிய தகவல்களை வழங்குவதன் மூலம் பேரிடர் கால உயிரிழப்புகள் குறையும் என்று குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

குடியரசு தலைவர் மாளிகையில் தேசிய புவி அறிவியல் விருதுகளை இன்று வழங்கி பேசிய அவர், நாட்டின் பல்வேறு பகுதிகளில் மண் சரிவு மற்றும் வெள்ளத்தால் நேரிட்ட உயிரிழப்புகள் குறித்து கவலை தெரிவித்துள்ளார்.

நிலச்சரிவு அபாயமுள்ள இடங்களை முன்கூட்டியே கண்டறிந்து அறிவிப்பதற்காக, கொல்கத்தாவில் தேசிய நிலச்சரிவு முன்னறிவிப்பு மையம் ஏற்படுத்தப்படுவதாக கூறினார்.

நம்நாடு 2047-ம் ஆண்டிற்குள் வளர்ச்சியடைந்த நாடாக உருவெடுக்க கனிம உற்பத்தியில் தற்சார்புடைய நாடாக மேம்பட வேண்டும் என்றார்

பொருளாதார மேம்பாட்டிற்காகவும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காகவும் சீர்த்திருத்தங்களும், படைப்புத் திறன் திட்டங்களும் முன்னெடுத்துச் செல்லப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

கனிம பிரிவில் மத்திய அரசின் பல்வேறு முன்னோடி திட்டங்களை அவர் சுட்டிக்காட்டினார்

இந்நிகழ்வில் 21 புவி சார் விஞ்ஞானிகளுக்கு 12 பிரிவுகளில் விருதுகளை குடியரசு தலைவர் வழங்கினார்.

புவி அறிவியல், கனிமங்கள் கண்டுபிடிப்பு, தாது தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் சிறப்பாக செயலாற்றிய பணியாளர்களை கவுரவிக்கும் வகையில் இவ்விருதுகள் வழங்கப்பட்டன.

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

இந்தோ பசிபிக் பிராந்தியத்தில் இந்தியாவின் முக்கிய பங்களிப்பு நாடாக மலேசியா திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்

புதுதில்லியில் மலேஷிய பிரதமர் அன்வர் பின் இப்ராஹீமுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர், பொருளாதார ஒத்துழைப்பில் இருநாடுகளுக்கு இடையே பல்வேறு வாய்ப்புகள் கண்டறியப்பட்டு வருவதாக கூறினார்.

நிதி தொழில்நுட்பம், மின்குறைகடத்தி, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் இருநாடுகளும் இணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்புகள் குறித்து பிரதமர் எடுத்துரைத்தார்

இந்தியாவின் மின்னனு பண பரிவர்த்தனை திட்டத்தையும், மலேசியாவின் **Pay net** திட்டத்தையும் இணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

பரஸ்பர ஒத்துழைப்பிற்கு வாய்ப்புள்ள அனைத்து துறைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக கூறிய பிரதமர், இருதரப்பு வர்த்தகம் சீராக இருநாடுகளுக்கு இடையே முன்னேறி வருவதாக குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மலேசிய பிரதமர் அன்வர் பின் இப்ராஹீம் இருநாடுகளுக்கு இடையிலான அரசியல் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதாக கூறினார்.

இருநாடுகளுக்கு இடையே பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாயின.

முன்னதாக குடியரசு தலைவர் மாளிகையில் மலேஷிய பிரதமருக்கு பாரம்பரிய கலாச்சார வரவேற்பு இன்று வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து புதுதில்லி ராஜ்கட்டில் தேசபிதா மகாத்மா காந்தியடிகளின் நினைவிடத்தில் அவர் அஞ்சலி செலுத்தினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 3 நாள் அரசுமுறை பயணமாக போலந்து, உக்ரைன் நாடுகளுக்கு நாளை புறப்படுகிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

இந்தியா - ஜப்பான்

இந்தியா - ஜப்பான் நாடுகளுக்கு இடையே பாதுகாப்பு வெளியுறவுத்துறை நிலையிலான பேச்சுவார்த்தைகள் புதுதில்லியில் இன்று நடைபெறுகின்றன.

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத்சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் உள்ளிட்டோர் ஜப்பான் பாதுகாப்பு வெளியுறவு அமைச்சர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கின்றனர்.

இருநாடுகளுக்கு இடையிலான நல்லுறவை வலுப்படுத்துவது, பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய சர்வதேச பிரச்சனைகள் குறித்த கருத்து பரிமாற்றங்களும் இதில் இடம்பெறுகின்றன.

இந்த பேச்சுவார்த்தையின் முன்னோடியாக அந்நாட்டு அமைச்சர்களை, பிரதமர் திரு. நரேந்திரமோடி சந்தித்து பேசியுள்ளார்

ராணுவம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து இதில் விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

சுகாதார அமைச்சகம்

மத்திய அரசின் கீழ் செயல்படும் மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ நிறுவனங்களின் பாதுகாப்பை வலுப்படுத்த மத்திய சுகாதார அமைச்சகம் அனைத்து தலைமை மருத்துவர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளது.

முக்கியமான இடங்களில் கண்காணிப்பு கேமராக்களை பொருத்தவும், அவசரகால தேவையை சமாளிக்க கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தவும் உத்தரவிட்டுள்ளது.

தேர்ச்சி பெற்ற பாதுகாப்பு காவலர்கள் மருத்துவமனை வளாகத்தில் பந்தோபஸ்திற்காக நிறுத்தப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளது.

அனைத்து நுழைவாயில்களும் மற்றும் வெளியேறும் இடங்கள் முழுமையாக கண்காணிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ள அமைச்சகம், மருத்துவ பணியாளர்கள் அடையாள அட்டைகளை அணிவது கட்டாயமாக்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளது.

பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்கொள்ள மருத்துவ ஊழியர்கள் அனைவருக்கும் உரிய பயிற்சிகள் அளிப்பதோடு, அவசர நிலையை எதிர்கொள்ளும் திறன்களிலும் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண் மருத்துவர்களுக்கு பாதுகாப்பான பணி அறைகள் வழங்கப்படுவதோடு, இரவு நேரங்களில் பாதுகாவலர் மற்றும் உரிய போக்குவரத்து வசதியும் ஏற்படுத்தி தரவேண்டும் என்றும் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

ஜம்மு காஷ்மீர் தேர்தல்

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் அடுத்த மாதம் 18-ம் தேதி, 24 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நடைபெற உள்ள முதல்கட்ட தேர்தலுக்கான அறிவிக்கை இன்று வெளியிடப்பட்டதை அடுத்து வேட்புமனு தாக்கல் தொடங்கியுள்ளது.

வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய வரும் 27-ம் தேதிவரை காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

ஒண்டி வீரன் - எல். முருகன்

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக கடந்த 10 ஆண்டுகளில் மத்திய அரசு, 11 லட்சம் கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

நெல்லை பாளையங்கோட்டையில் உள்ள ஒண்டி வீரனின் மணி மண்டபத்தில் அவரது சிலைக்கு இன்று, மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர்,

3 ஆண்டுகளுக்கு முன்னர் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் உத்தரவின் பேரில் ஒண்டிவீரன் நினைவாக அஞ்சல் தலை வெளியிடப்பட்டதாக குறிப்பிட்டார்.

வெள்ளையர்களை எதிர்த்து போராட்டம் நடத்திய பல்வேறு தலைவர்களை தந்தது திருநெல்வேலி மண் என்றும் அவர் புகழாரம் சூட்டினார்

மெட்ரோ ரயில் தொடர்பான பயன்பாட்டு அறிக்கை தணிக்கையை தமிழக அரசு வழங்கினால் உடனடியாக அத்திட்டத்திற்கு நிதி வழங்கப்படும் என்றும் கூறினார்.

மகளிருக்கு எதிரான பாலியல் வன்கொடுமை குற்றவாளிகளுக்கு பாரபட்சமின்றி தண்டனை வழங்கப்பட வேண்டுமென்றார்.

கேள்வி ஒன்றிற்கு பதிலித்த அமைச்சர், தேசிய ஜனநாயக கூட்டணி வலிமையான கூட்டணியாக திகழ்கிறது என்றார்.

முன்னதாக தூத்துக்குடி விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், வரும் 2047-ம் ஆண்டிற்குள் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக உருவெடுக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் 200 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகளின் சேவைகளை தலைமை செயலகத்தில் இன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் கணக்கர் பணியிடங்களுக்கு தெறிவு செய்யப்பட்ட 537 பேருக்கும்,

கருவூல துறையில் பணிகாலத்தில் மறைந்த ஊழியர்களின் வாரிசுதாரர்கள் 10 பேருக்கும் பணி ஆணைகளை இன்று வழங்கினார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் ஆயிரத்து 474 பேருக்கு மருந்தாளுநர் மற்றும் உதவியாளர்களுக்கான பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் வழங்கினார்.

கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் தஞ்சை, கரூர், தூத்துக்குடி, ராமநாதபுரம், புதுக்கோட்டை உள்ளிட்ட மாவட்டங்களில் கட்டப்பட்ட புதிய கட்டிடங்களையும்,

மீன்வள பல்கலைக்கழக வளாகத்தில் புதிய உழவர் பயிற்சி மைய கட்டிடத்தையும் முதலமைச்சர் காணொலி வாயிலாக இன்று திறந்து வைத்துள்ளார்

❖❖❖❖❖❖❖❖

வாக்காளர் சுருக்கமுறை

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணிகள் இன்று தொடங்குகின்றன.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடுவீடாக சென்று இப்பணிகளை மேற்கொள்கின்றனர்.

திருச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. மா.பிரதீப்குமார் தலைமையில் நடைபெற்ற சிறப்பு வாக்காளர் சுருக்கமுறை திருத்த கூட்டத்தில் பேசியஅவர், வாக்காளர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

.. வாய்ஸ் ..

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடுகளுக்கு வரும் போது பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்குமாறு ஆட்சித் தலைவர் திரு. பிரசாந்த் கேட்டுக் கொண்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

முத்துசாமி

ஈரோடு நல்லாம்பட்டி அருகே கீழ்பவானி வாய்க்கால் கசிவுநீர் குழாயில் ஏற்பட்டுள்ள உடைப்பு 2 நாட்களில் சீர் செய்யப்பட்டு தண்ணீர் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாநில வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. முத்துசாமி தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

ஒண்டி வீரன் - அமைச்சர்கள்

சுதந்திர போராட்ட வீரரான ஒண்டி வீரனின் 253-வது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது

அன்னாரது சொந்தஊரான தென்காசி மாவட்டம் பச்சேரி கிராமத்தில் உள்ள நினைவு ஸ்தூபியில் மாநில அமைச்சர் திரு. **KKSSR** ராமச்சந்திரன், ஆட்சித்தலைவர் திரு.கமல் கிஷோர் உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தினர்.

நாமக்கல்லில் பி.ஜே.பி. மாநில துணைத்தலைவர் திரு. வி.பி. துரைசாமி,

சேலத்தில் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அன்னாரது உருவப்படத்திற்கு இன்று மலர்த்தூவி மரியாதை செலுத்தினர்.

❖❖❖❖❖❖❖❖

இருவரி

உதகை தொட்டபெட்டா செல்லும் சாலையில் பராமரிப்பு பணிகள் காரணமாக தொட்டபெட்டா காட்சிமுனை இன்றுமுதல் 3 நாட்களுக்கு மூடப்படுவதாக வனத்துறை அறிவித்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை ஆட்சித்தலைவர் திருமதி. அழகுமீனா தலைமையில் நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖